00101

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை - 2021/2022
அரசியலமைப்புச் சட்டம் **II- LLU4708**
காலம்: மூன்று (03) மணித்தியாலம்

திகதி: 25.01.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08).

ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

குறைந்த பட்சம் பகுதி **I** இலிருந்து இரு (02) வினாக்களையும், பகுதி **II** இலிருந்து இரு (02) வினாக்களையும் தெரிவுசெய்து ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

ஒவ்வொரு வினாவும் 20 புள்ளிகளிற்கானது.

## பகுதி I

1. 'பெரும்பாலான நவீன அரசியலமைப்புகளில் அடிப்படை உரிமைகளின் பிரகடனம் ஒன்று காணப்படுகிறது. [...] உரிமைகளுக்கான அரசியலமைப்பு அந்தஸ்தின் எழுச்சி அவற்றை அரசால் மீறவியலாத புனிதத்தை அளிக்கிறது.'

   Jayampathy Wickremaratne, Fundemental Rights of Sri Lanka, 3rd ed.p.9

   மேலுள்ள கூற்றின் பொருத்தப்பாட்டை இலங்கையின் பின்னணியல் இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்பு வரலாற்றின் மீது ஆராய்க. சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்பாக்க செயன்முறைகளின் போது மனித உரிமைகளிற்கான அரசியலமைப்புசார் பாதுகாப்பு எனும் கருத்தேற்பு எவ்வாறு முற்போக்காக நிறுவப்பட்டது என்பதை உமது விடை விளக்க வேண்டும்.

2. பிரபாத் என்பவன் சமூக ஊடகப் பரப்பில் பணியாற்றும் ஒரு சுதந்திர ஊடகவியலாளர் ஆவார். அவனது யூடியுப் பக்கம்( Youtube Channel) ஆனது சமகால சமூக மற்றும் அரசியல் விடயங்கள் மீது விவரணங்களைக் கொண்ட, அதிக அளவில் பார்வையிடப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகின்றது. அவன் சர்ச்சைக்குரிய அறிக்கைகளை ஆக்குவதற்காக பிரசித்தமாக அறியப்பட்டான். அண்மையில் அவனால் பதிவேற்றப்பட்ட மதம்சார் விடுமுறைகளின் போது மதுபாவனையின் விற்பனையை தடைசெய்தமை பற்றி ஆராயப்பட்ட காணொளி ஒன்றில் பிரபாத் பின்வரும் கூற்றை வெளியிட்டுள்ளான்:

   '.... மதம்சார் முக்கிய நாட்கள் என்று அழைக்கப்படும் தினங்களில் அரசு மதுபானக் கடைகளை மூட வேண்டும் என நான் எண்ணவில்லை. நாம் பகிரங்கமாக பேசாத போதும் சாதாரண மக்களைப் போன்று எமது மத குருமார்களும் அனுபவம் மிக்க குடிகாரர்கள்

*(bebaddas)* ஆவர். எமது வாழ்க்கைமுறை குறித்து இந்த வேடதாரிகள் விதிகளை தீர்மானிக்க இயலாது.'

இக்காணொளி பிரசித்தமானதுடன் பல மத பீடங்களில் இருந்து மத குருமார்களை 'குடிகாரர்கள்- *bebaddas'* என்ற பதத்தை பயன்படுத்தி குறிப்பிட்டமை கோபம்மிக்க பதிலை ஏற்படுத்தியிருந்தது. பொலிஸிற்கு கிடைக்கப்பெற்ற ஒரு முறைப்பாட்டின் மீது, பிரபாத் வேலையில் இருந்து வீடு திரும்பும் போது 2022 மே மாதம் 3 ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்டான். பிரபாத்தின் கூற்றால் தனிப்பட்ட முறையில் கோபமுற்றிருந்த தொடர்புடைய பொலிஸ் நிலையத்தின் தலைமைக் காவலர் பொலிஸ் நிலையத்தின் தனிச்சிறையில் அவனை இரு நாட்களாக காவலில் வைத்திருந்தார். முழு தடுப்பு காவல் காலத்திலும் பிரபாத் ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக இருக்க கட்டளையிடப்பட்டான். தலைமைக் காவலர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் சிறைக்கு அடிக்கடி சென்று பிரபாத்தை கடும் வார்த்தைகள் கொண்டு பேசியதுடன் 'இவனிற்கு நல்ல பாடம் புகட்டப்படும்' என்றும் அச்சுறுத்தப்பட்டான். 'அவனிற்கு ஒரு நாளில் ஒரு வேளை உணவு மாத்திரமே கொடுக்கப்பட்டதுடன், அவ்வுணவு கஞ்சியாக இருந்ததுடன் அது துர்நாற்றம் கொண்டதாக இருந்ததாக பின்னாளில் பிரபாத்தால் விபரிக்கப்பட்டது. அவன் நீதவான் நீதிமன்றத்தில் 6 ஆம் திகதி மே 2022 இல் சமர்ப்பிக்கப்பட்டான். பொலிசார் அவன் மீது "சமூகங்களுக்கிடையில் வெறுப்பை தோற்றுவித்தல்" எனும் குற்றத்தை சுமத்தினர். பிணையில் விடுவிடுக்கப்பட்ட பிரபாத் பொலிஸின் நடத்தைக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்ய எண்ணுகிறான்.

பிரபாத்திற்கான சட்டத்தரணி நீர் எனக்கருதி அவன் கோரக்கூடிய சாத்தியமான கோரிக்கைகள் மீது குறிப்பு ஒன்றை எழுதுக. இக்கோரிக்கைகளுக்கு எதிராக பிரதிவாதிகள் முன்வைக்கக்கூடிய சாத்தியமுள்ள பிரதிவாதங்கள் உமது விடையில் ஆராயப்பட வேண்டும்.

3. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் நிறுவப்பட்ட அடிப்படை உரிமைகளின் சட்டவியலின் வியத்தகு சாதனையானது, சட்டத்தின் முன் சமப்பாதுகாப்பு எனும் கருத்தேற்பிற்கு எமது நீதிமன்றங்களால் அடையப்பட்ட விரிவான பொருளாகும்.

   மேலுள்ள கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? மேலுள்ள கூற்றை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் தொடர்புறுத்தி நுணுக்கமாக ஆராய்க.

4. பிகாபோ என்பது ஒரு கடும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை பின்பற்றும் வளர்ந்து வரும் நாடு ஆகும். அதன் புதிய பொருளாதார கொள்கையின் ஒரு பாகமாக நாட்டின் மின்சார சபை முதலான அரசாங்க உடமை கொள்ளப்பட்ட அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்களை இந்நாடு தனியார்மயப்படுத்தியுள்ளது. மின்சார சபையானது தற்போது பிகாபோ எலக்ட்ரோ பி.எல்.சீ என்று அறியப்பட்ட ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனியினால் உரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கம்பனியின் 49% பங்குகளை அரசு உரித்து கொண்டு உள்ள அதேவேளை பெரும்பான்மை பங்குகள் ஒரு வெளிநாட்டு நிறுவனத்தின் உடமையாக உள்ளது.

   பின்வரும் நடவடிக்கைகளை பிகாபோ எலக்ட்ரோ செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கிறது

- கிராமப்பகுதிகளில் வழங்கப்படும் மின்சாரத்திற்கு அதிக கட்டணமொன்றை விதித்தல். கிராமப்புறங்களில் மின்சார தேவை குறைவாக உள்ளதனால் கம்பனி நட்டமின்றி செயற்படுவதற்கு அதிக கட்டணமொன்று அனுமதிக்கும். கிராமப்புற பகுதிகளின் விவசாய சமூகங்களுடன் பணியாற்றும் சமூக ஆர்வலர் ஒருவரான திரு.குகா அவர்கள் இப்புதிய தீர்மானம் ஆனது பெரும் எண்ணிக்கையிலான கிராமப்புறவாசிகள் மின்சாரத்தை பயன்படுத்துவதை தடுக்கும் என நம்புகிறார்.

- நாடு முழுவதும் பல ஆறுகள் மற்றும் ஓடைகள் என்பவற்றை குறித்து நோக்கி இருபது சிறிய நீர் மின் நிலையங்களை நிறுவுவதற்கு புதிய செயற்திட்டமொன்றை ஆரம்பித்தல். சுற்றுச்சூழலில் இச்சிறிய நீர் மின் நிலையங்கள் ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தீங்குகள் குறித்து சூழல் ஆய்வாளர்கள் தமது கவலையை தெரிவிக்கின்றனர். ஏர்த்-மேட்ஸ் என்று அழைக்கப்படும் ஒரு சிவில் சமூக தாபனம் குறித்துரைக்கப்பட்டுள்ள இச்செயற்திட்டம் குறித்த தகவலை கோரி கம்பனிக்கு எழுதுகிறது. கம்பனி எவ்வித தகவலையும் தெரிவிக்க மறுக்கிறது.

பிகாபோ எலாக்ரோவின் தீர்மானங்களை கேள்விக்கு உட்படுத்தி ஒரு அடிப்படை உரிமைகள் மனுவை சமர்ப்பிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து திரு.குகா மற்றும் ஏட்த்-மேட்ஸ் என்போர் உமது அறிவுரையை நாடுகின்றனர். இவர்களுக்கு பின்வருவன மீது அறிவுறுத்துக :

(அ) பிக்காப்போ எலொக்ரோவிற்கு எதிராக வழக்கு ஒன்றை கொண்டு வர முடியுமா ;
(ஆ) வாதிகள் முன்வைக்கக்கூடிய அடிப்படை காரணிகள்
(இ) திரு.குகா மற்றும் ஏர்த் -மேட்ஸ் என்போர் மனுவை சமர்ப்பிக்க தகைமை உடையோரா.

பிகாபோவின் அரசியல் அமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகளின் சட்டவியல் என்பன இலங்கையை ஒத்தன என கருதுக. இந்த விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் நியாயப்படுத்தக.

## பகுதி II

5. "தாரளவாத அரசியலமைப்பாக்கம் (Liberal Constitutionalism) எனும் கருத்தேற்பின் இதயமாக எதிர்விளைவு தரும் பெரும்பான்மைவாதம் (Countervailing Majoritarianism) காணப்படுகிறது. இதனால் சட்டவாக்கத்தின் கொடுங்கோன்மையின் வெளிப்பாட்டை தடுப்பதற்கு அரசியலமைப்பாக்கம் தேடப்பட்டுள்ளது."

மேலுள்ள கூற்றின் அடிப்படையில், தாரளவாத அரசியலமைப்பாக்கம் எனும் கருத்தேற்பை இலங்கையின் குடியரசு அரசியலமைப்புகள் எந்தளவு தூரம் பிரதிபலிக்கின்றன என நுணுக்கமாக ஆராய்க. உமது விடையில் பிற <u>இரண்டு</u> நியாயாதிக்கங்களிலிருந்து ஒப்பீட்டை உள்ளடக்க நீர் எதிர்பார்க்கப்படுகிறீர்.

6. இலங்கையில் அதிகாரப்பரவலாக்க கட்டமைப்பை விருத்தி செய்ய பணியாற்றும் ஒரு அரசாங்க ஆணைக்குழுவில் ஆய்வு உதவியாளர் ஒருவராக நீர் நியமிக்கப்பட்டுள்ளதாக கருதுக. இந்த செயற்திட்டத்தின் ஒரு பாகமாக *அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தம்* மீதான வழக்கு அறிக்கையொன்றை நீர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர். பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையான மாறுபட்ட தீர்ப்புகள் இரண்டையும் தொகுத்துரைக்குமாறு ஆணைக்குழு உம்மை வேண்டுகிறது. மேலும் மாகாண சபைகளின் பரப்பு குறித்து உயர்நீதிமன்றம் அளித்த பொருட்கோடல் அதிகார பரவலாக்கத்தின் பரந்த பார்வையுடன் இணங்குகிறதா என்றும் உமது கருத்தை ஆணைக்குழு நாடுகிறது.

7. 'சமஷ்டி' அதிகார பரவலாக்கம் மற்றும் பரவலாக்கம் முதலான சகல அதிகார பகிர்வு ஏற்பாடுகளும் தமது பரப்புகளில் வேறுபட்டபோதும், அதிக பதிலுரைக்கும் பொறுப்புக்கூறும் சனநாயக அரசாங்கம் ஒன்றை உறுதிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளன.ஆயினும் இவை அரசியல் பன்மைத்துவத்திற்கான ஒரு பரந்த பரப்பையும் அளிக்கிறது.'

மேலுள்ள கூற்றை <u>இலங்கை முதலான</u> உமது தெரிவில் <u>மூன்று</u> நியாயாதிக்கங்களை தெரிவுசெய்து மத்திய அரசிற்கும் அதன் புறப்பகுதிகளிற்கும் இடையே எவ்வாறு அதிகாரம் பகிரப்படுகிறது என ஆராய்க.

8. பின்வருவன மீது சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(அ) மாகாண மேல் நீதிமன்றங்கள்

(ஆ) மாகாணசபை முறைமையில் ஆளுநரின் வகிபங்கு

(இ) மாகாண பகிரங்க சேவை

(ஈ) மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரங்களிற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான உறவு

பதிப்புரிமை பெற்றது